# கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 25.07.2023 ந் தேதி நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சியில் நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் (NSMT) 2023-24 ன் கீழ் சிலேட்டர் ஹவுஸ் வீதி (A)-057023R0652 , அண்ணா வீதி -057007R0183, பஜனை கோவில் 3 வது வீதி-057030R0818 , சிலேட்டர் ஹவுஸ் வீதி -5-057023R0656 , மாரியம்மன் கோவில் வீதி -6-057029R0788 , ஆகிய இடங்களில் சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகளை ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.515 நாள்.30.06.2023–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 12.07.2023 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்.S.P.D. இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் ஒப்பந்ததாரர் |
| 2 | திருவாளர். A K N.கன்ஸ்ட்ரக்ஷன் , ஒப்பந்ததாரர் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் திருவாளர்.S.P.D. இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் ஒப்பந்ததாரர் மட்டுமே தொழில் நுட்ப தகுதி பெற்றிருந்ததால் உரிய அறிவிப்பு அனுப்பப்பட்டு 17.07.2023 –ல் விலை விவரங்கள் அடங்கிய உறை திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு விலை விகிதம் அளித்துள்ளார்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|
| 1 | திருவாளர்.S.P.D. இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் ஒப்பந்ததாரர் ஈரோடு | ரூ. 31,27,594.84 /– மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே வழங்கியுள்ள திருவாளர்.S.P.D. இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1568/2023/இ1)

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அ.). மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1) அனுமதிக்கப்பட்டது. 2) ஏற்றுக்கொள்ளப்பட்டது,மன்றத்தீர்மானம் எண்.572**

2. இந்நகராட்சியில் நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் (NSMT) 2023-24 ன் கீழ் காளியண்ணனன் எக்ஸ்டன்சன் - 4-057002R0050, சாய் அபிராமி நகர் 2வது மெயின் ரோடு-057010R0270,சாய் அபிராமி நகர் 2வது மெயின் குறுக்கு வீதி 1-057010R0271,அழகு நகர் மெயின் ரோடு 057011R0356, அழகு நகர் குறுக்கு வீதி 057011R0357, சாந்தி நகர் 057011R0358, பாரதி வீதி -057012R0378, பாரதி வீதி -057012R0379, சுப்பண்ணன் 9வது சந்து -057016R0491, அம்மன் நகர் 2 வது வீதி -057016R0487, அம்மன் நகர் 1 வது வீதி -057016R0488, அம்பிகை நகர் - 1-057025R0704, அம்பிகை நகர் - 2-057025R0705 , அம்பிகை நகர் - 3-057025R0706, அம்பிகை நகர் - 1-057025R0707, அம்பிகை நகர் - 2-057025R0708, அம்பிகை நகர் - 3-057025R0709, அம்பிகை நகர் – 1 -057025R0710, அம்பிகை நகர் -5-057025R0711, அம்பிகை நகர் 057025R0712, அம்பிகை நகர் 057025R0713, தி.ரு.வி.க.வீதி– 4 057025R0716, மாரியம்மன்கோயில் 1 வது வீதி -057029R0784, மாரியம்மன்கோயில் 1 வது வீதி -057029R0789, பெரியண்ணன் வீதி –1 057029R0793, அன்பு நகர் 057029R0794 (பகுதி), பஜனை கோயில் 2 வது வீதி-057030R0819, ராம் நகர் 3 வது குறுக்கு வீதி 057023R0645 , ஆகிய இடங்களில் தார்சாலைகள் மேம்பாட்டு பணிகளை ரூ.81.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற

தீர்மான எண்.515 நாள்.30.06.2023–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 12.07.2023 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்.S.P.D. இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் ஒப்பந்ததாரர் |
| 2 | திருவாளர். A K N.கன்ஸ்ட்ரக்ஷன் , ஒப்பந்ததாரர் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் திருவாளர் S.P.D இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் ஒப்பந்ததாரர் மட்டுமே தொழில் நுட்ப தகுதி பெற்றிருந்ததால் உரிய அறிவிப்பு அனுப்பப்பட்டு 17.07.2023 –ல் விலை விவரங்கள் அடங்கிய உறை திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு விலை விகிதம் அளித்துள்ளார்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|
| 1 | திருவாளர்.S.P.D. இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் ஒப்பந்ததாரர் ஈரோடு | ரூ. 77,12,070 மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே வழங்கியுள்ள திருவாளர்.S.P.D. இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1569/2023/இ1)

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அ.). .மன்றம் அனுமதிக்கலாம்

ஆ). பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1) அனுமதிக்கப்பட்டது. 2) ஏற்றுக்கொள்ளப்பட்டது,மன்றத்தீர்மானம் எண்.573**

3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எ.ண்2462/2023/இ1 நாள்.21.06.2023 ல் தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு தொலைபேசி உதவி மையத்தை திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக தரைதளத்தில் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்தில் கோபிசெட்டிபாளையம் நகராட்சி மூலம் பணியினை செய்து முடிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 லட்சத்திற்கு இந்நகராட்சி மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை செய்து முடிக்க மன்ற அனுமதிக்கும் மேலும், மேற்படி பணிக்காகும் செலவினத்தை ஈரோடு மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளான பவானி நகராட்சி, கோபிசெட்டிபாளையம் நகராட்சி, சத்தியமங்கலம் நகராட்சி மற்றும் புன்செய் புளியம்பட்டி நகராட்சி ஆகிய நகராட்சிகள் சரிசமமாக பிரித்து செலவுகள் மேற்கொள்ளவும், அரசிடமிருந்து தொகை வரப்பெற்றவுடன் சம்மந்தப்பட்ட நகராட்சிகளுக்கு செலவுசெய்யப்பட்ட தொகை திரும்ப (Reimbursement) விடுவிக்கப்படும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் உத்திரவிடப்பட்டுள்ளதன்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.(ந.க.எண்.1538/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் ,
2. மேற்காண் செலவின தொகையை நகராட்சி பொது நிதியில் செலவிடலாம் ,
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1,2, மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.574**

4. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவு பயன்பாட்டில் உள்ள கீழ்கண்ட வாகனங்கள் பதிவு செய்யப்பட்டு 15 வருடங்கள் கடந்த நிலையில் உள்ளதால் மத்திய அரசு வாகன சட்டம் G.O.G.S.R.29 (E) நாள்.16.01.2023 ன் படி வாகன பதிவினை புதுப்பித்து மீண்டும் பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே கீழ்கண்ட வாகனங்களை இயக்காமல் நிரந்தரமாக நிறுத்தி வைத்து கழிவு செய்யலாம் .

| வ.எண். | வாகன பதிவு எண். | வாகனத்தின் விவரம் | வாகனம் பயன்பாட்டில் உள்ள காலம் |
|---|---|---|---|
| 1 | TN 36 J 6885 | Dumper plazer | 17 ஆண்டுகள் |
| 2 | TN 36 J 6855 | Dumper plazer | 17 ஆண்டுகள் |
| 3 | TN 36 J 2724 | Tipper | 17 ஆண்டுகள் |
| 4 | TN 36 J 5977 | Tipper | 17 ஆண்டுகள் |
| 5 | TN 36 D 2709 | Water supply Lorry | 24 ஆண்டுகள் |
| 6 | TN 36 F 7005 | Jeep | 19 ஆண்டுகள் |

குடிநீர் வாகனம் கழிவு செய்யப்படுவதால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் தடைபடாமல் வழங்க ஒப்புந்தப்புள்ளி கோரி ஒப்பந்த அடிப்படையில் புதிதாக குடிநீர் வாகனம் வாங்கும் வரை தனியார் வாகனம் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கவும் மற்றும் பொறியியல் பிரிவிற்கு புதிய ஈப்பு வாகனம் வாங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டதன் அடிப்படையில் புதிய ஈப்பு வாகனம் வாங்கும் வரை பொறியியல் பிரிவில் தற்பொழுது உள்ள ஈப்பு வாகனத்தை இயக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.1511/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் .

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.575**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள KNMT கடை எண்.1,2,3,4 ஆகிய நான்கு கடைகளை திரு.N.அன்புசெல்வம் ராஜாகேட்டர்ஸ் என்பவர் 01.07.2023 முதல் குத்தகைக்கு எடுத்து நடத்திவருகிறார் குத்தகைதாரர் மேற்படி கடைகளின் மூன்று உட்புறசுவர்களை இடித்து ஒரே கடையாக நடத்திக்கொள்ள மனு அளித்துள்ளார் பொறியர் குறிப்பின் படி குத்தகைதாரரிடம் ரூ.1,50,000/– வைப்பு தொகை செலுத்திய பின்பும்,முத்திரைதாள் ஒப்பந்தம் பெற்றுகொண்டும் குத்தகை காலம் 9 ஆண்டுகள் முடிந்தபின் கடையினை பழையபடியே ஒப்படைக்க உறுதிமொழி படிவம் பெற்றுக்கொண்டு உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1666/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் .

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.576**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி